23-10-2018
**O.S No**68/2016
வா.சா.1 நல்லுசாமி
வா.சா. 1 சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை..
கு.வி.

நான் 9 ம் வகுப்பு வரை படித்திருக்கிறேன். நான் தோல் விற்பனை செய்யும் தொழில் செய்து வருகிறேன் என்னுடைய தொழிலுக்கான வருமான வரி செலுத்துகிறேன். 2013 லிருந்து வருமான வரி செலுத்தி வருகிறேன். வருமான வரி கணக்கை தாக்கல் செய்ய தயாராக இருக்கிறேன். 1ம் பிரதிவாதி எனக்கு மாமா உறவு முறை. அவர் எனது உறவுக்காரர் என்று என்னுடை யபிராதிலோ பிரமாண பத்திரிக்கையிலோ சொல்லவிலலை. இந்த வழக்கு தாக்ல செய்வதற்கு முன்பாக இரண்டு முறை வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியிருக்கிறேன். நான் கொடுத்த தகவலின்பேரில்தான் எனது வழக்கறிஞர் அறிவிப்புக்களை அனுப்பினார். நான் முதன் முதலாக 2014 ல் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. 20-1-2014 ல் அனுப்பி விட்டேன் அதை நான் தாக்கல் செய்யவில்லைஎன்றால் சரியல்ல தாக்கல் செய்திருக்கிறேன் .அந்த அறிவிப்பில்சொல்லப்பட்டுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். அந்த அறிவிப்பிற்கு பிரதிவாதி தரப்பில் பதில் அறிவிப்பு கொடுத்த விவரம் எனக்குதெரியும் அந்த பதில் அறிவிப்பை என்னுடைய தரப்பில்தாக்கல் செய்யவில்லை. முதல் முதலாக நான் அனுப்பிய அறிவிப்பில் வா.சா.ஆ 2 பிரதிவாதி எழுதி கொடுத்ததாக சொல்லப்படும ஆவணத்தை குறித்து அந்த அறிவிப்பில்சொல்லவில்லையென்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ 2 ல் தேதி மாதம் திருத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். முத்திரைத்தாளில் உள்ள 7383 என்ற எண்ணுக்கு கீழ் உள்ள தேதி 15-5-2013 என்பது 13-5-2013 என்று திருத்தமாகி உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ 2 ராஜசேகரன் என்ற கையெழுத்துக்கு மேல் பிரிண்ட் ஆகி உள்ளது என்று சொன்னால் சரியல்ல. வா.சா-ஆ 2 தயாரிப்பதற்கான முத்திரைத்தாள் நான்தான் வாங்கி வந்தேன். வா.சா.ஆ 1ற்கான வாய்தா 6 மாதம் கொடுக்கப்பட்டது. அந்த வாய்தாவிற்குள் கிரையம் செய்துகொடுக்கும்படி நான் அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை. வா.சா-ஆ 1 ன் படி 29-10-2013 க்குள் கிரையம் செய்து கொடுக்கவேண்டும் என்று வா.சா.ஆ 1ல் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த தேதிக்குள் வழக்கறிஞர் அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை. மேற்படி வாய்தா நான் கேட்டதால்தான் நீட்டித்து கொடுக்கப்பட்டது என்ற வாசகங்கள் வா.சா-ஆ 1லே பின்பக்கத்தில் எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அவர்கள் கேட்டதால்தான் எழுதப்பட்டது. அவ்வாறு பிரதிவாதிகள் கேட்டதாக வாசகங்கள் இல்லை என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ 1ல் மேற்குறிப்பு பத்திர எழுத்தர் அலுவலகத்தில் வைத்து எழுதப்பட்டது. பத்திர எழுத்தர் பெயர் பால்ராஜ். அவர் எழுதியதாக கையெழுத்து செய்துகொடுக்கவில்லை.

Sd/-
III Additional District Judge, Salem.

23-10-2018
ஓ எஸ் 260/2015
பிவா.சா. 3 அர்த்தனாரி ( ஓ எஸ் 254/2016 )-(5, 12,13,14,பிரதிவாதி தரப்பு சாட்சி. )
பி வா.சா. 3 சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு (ஓ எஸ் 254/16 ன்) வாதி மற்றும் இவ்வழக்கில் (2 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை..
கு.வி.

நான் அசல் வழக்கு 254/16 ல் 5 ம் பிரதிவாதி. இந்த வழக்கின் வாதியின் சகோதரர் பெயர் ரமேஷ்குமார். ரமேஷ்குமாரின் தாயார் பெயர் பாக்கியம். சுரேஷ்குமாரின் தாயார் பெயர் சரோஜா. மேற்படி பாக்கியமும், சரோஜாவும் அக்கா - தங்கைகள் அல்ல. மேற்படியார்களின் கணவர் பெயர் வேணுகோபால் . வாதி ரமேஷ்குமாருக்கு 1 ஏக்கர் 43 சென்ட் இருப்பதற்கான ஆவணம் எதுவும் தாக்கல செய்யப்படவில்லை. எந்த ஆவணத்தின் அடிப்படையில்வாதிகளுக்கு 1 ஏக்கர் 43 சென்ட் பாத்தியம் என்று சொல்கிறேன் என்றால் அவர்கள் விற்றது போக என் நிலத்திற்கு இணையாக உள்ள நிலம் 1 ஏக்கர் 43 சென்ட் இருக்கிறது என்று சொல்கிறேன். ஆவண எண் 1336/1993 1 ம் அயிட்ட சொத்தை பெருமாள் கவுண்டரிடம் வாதி மற்றும 1 முதல் 3 பிரதிவாதிகளின் தந்தை வழி பாட்டனார் பெருமாள் கவுண்டர் தாவா 1 ம் அயிட்டசொத்தை பழனியம்மாள் என்பவரிடமிருந்து கிரையம் வாங்கியுள்ளார் என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. அதேபோல் 2 ம் அயிட்ட சொத்தை கோவிந்தகவுண்டரிடமிருந்து கிரையம் வாங்கியுள்ளார் என்றால் அது எனக்கு தெரியாது. 3 ம் அயிட்டசொத்தை ஒரு அப்பாவு கவுண்டரிடமிருந்து வாங்கினார் என்றால் அது எனக்கு தெரியாது 4 ம்அயிட்ட சொத்து பெருமாள் கவுண்டருக்கு பட்டா முறையில் பாத்தியப்பட்டது என்று சொன்னால் அது எனக்குதெரியாது. நான் ஏமாற்றி கிரையம் பெற்றதால்தான் வாதிகளின் மீதி நிலம் 1 ஏக்கர் 43 சென்ட் நிலம் உள்ளது என்றால் சரியல்ல. இவ்வழக்கில் நான் தரப்பினர் இல்லை. இவ்வழக்கில் நான் தரப்பினர் இல்லை என்பதால் யார் பெயரில் வழக்கு தாக்கல் செய்திருக்கிறார்கள் என்று எனக்கு தெரியாது.இவ்வழக்கில் சொல்லப்பட்டுள்ள சொத்து விவரம் எந்த ஆவணத்தின் அடிப்படையில்சொல்லப்பட்டுள்ளது விவரம் எனக்கு தெரியாது. இவ்வழக்கில் வாதி உரிய ஆவணங்களை கொண்டுதான் வழக்கை தாக்கல் செய்திருக்கிறார் என்று சொன்னால் அதை என்னால் சொல்ல இயலாது. இவ்வழக்கில் வாதிக்கு எவ்வளவு சொத்து பாத்தியப்பட்டது என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. என்க்கு கொடுத்த கிரய பத்திரம் மற்றும் எப் எம் காப்பி ஆகியவற்றை கொண்டு சொல்கிறேன். தாவா 4 வது அயிட்டசொத்து புறம்போக்கு நிலம் அனுபவத்தின் பேரில் பெருமாள் கவுண்டருக்கு பட்டா வழங்கப்பட்டு விட்டதால் அரசு தரப்பினரை வழக்கில்சேர்க்கவேண்டிய அவசியம் இல்லை என்று சொன்னால் சரிதான்.

Sd/-

III Additional District Judge, Salem.

23-10-2018

O.S 187/2016

வா.சா. 1 பழனியாண்டி
வா.சா. 1 மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு 4 ம்பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை..

கு.வி.

16-9-1994-ல் நான் தாவா சொத்தை கிரையம் வாங்கியதாக வழக்கில் சொல்லியிருக்கிறேன். 16-8-2016 ல் இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன். தாவா சொத்து கிரைய பத்திரப்படி எனக்கு பாத்தியப்பட்டது என்று பரிகாரம் கேட்டிருக்கிறேன். மணி என்பவரை வழக்கில்தரப்பினராக சேரத்திருக்கிறீரா என்றால் ஆம் சேர்த்திருக்கிறேன் மணி என்பவர் தான் கே. எஸ். பழனியாண்டி. வழக்கில் மணி என்ற பெயரை குறிப்பிடவில்லை. கே் . எஸ் மணியை பழனியாண்டி என்று அழைப்பார்கள். மணி என்பவர் வழக்கில் தரப்பினராக காட்டப்பட்டுள்ளாரா என்றால் இல்லை. மணி என்பவரை பொறுத்து பிராதில் சொல்லப்படவில்லை. தாவா சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என்றும் என் அனுபவத்தை இடையூறு செய்யக்கூடாது என்றும் பரிகாரம் கேட்டிருக்கிறேன். தாவா சொத்தில் சுவாதீனத்தில்இருப்பதற்கான வருவாய்துறை ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்திருக்கிறீர்களா என்றால் தாக்கல் செய்யவில்லை. மேற்படிவருவாய் துறை ஆவணங்களை கேட்டு தாசில்தாரிடம் மனு செய்திருக்கிறேன். இவ்வழக்கு தாக்கல் செய்யும் சமயத்தில் சென்ட்ரல் லா கல்லூரிஅருகில் குடியிருந்தேன். 87/7 ஜி அன்னை இந்திரா நகர் கொல்லப்பட்டி சேலம் என்ற முகவரியில்இருந்தேன். பிராதில் 4 வது மெயின் ரோடு அன்னை இந்திரா நகர் என்று குறிப்பிட்டிருக்கிறேன். கதவு எண் குறிப்பிடவில்லை. மேற்படி முகவரியில் 20 வருடமாக குடியிருக்கிறேன். நான் குடியிருக்கும் இடத்திற்கும் தாவா சொத்திற்குமிடையே சுமார் 4 – 5 கிலோ மீட்டர் தூரம் இருக்கும் நான் அடிக்கடி தாவா சொத்திற்கு போவேன். தாவா சொத்தில் சுற்றிலும் வேலி போட்டுள்ளேன். அது முள்வேலி. தாவா சொத்தில் போட்டோ எடுத்து தாக்கல செய்திருப்பதாக பிராதில்சொல்லியிருக்கிறேன் ஆனால்போட்டோக்களைதாக்கல் செய்யவில்லை. பிராது பாரா 5 ல் மோசடி ஆவணங்கள் குறித்து ஜுலை 2016 ல் தெரிய வந்ததாக சொல்லியிருக்கிறேன். 5 ம் பிரதிவாதிக்கு தாவா தாக்கல் செய்வதற்கு முன்பாக நோட்டீஸ்அனுப்ப்பபட்டதா என்றால் அவ்வாறு அனுப்பவில்லை. என்னுடைய அலுவலக குடியிருப்பு முகவரியை வழக்கில்சொல்லியிருக்கிறேன். நான் 31-12-2008 ல் பணி ஓய்பு பெற்றுவிட்டேன். தாவா சொத்திற்கும் என்னுடைய குடியிருப்புக்குமிடையே 1/2 கி மீ தூரம் இருக்காது என்று சொன்னால் சரியல்ல. மெயின்ரோடு வழியாக வரும்போது அவ்வாறு கி மீ வராது. சுமார் 4-5 கி மீ வரும் . தாவா தாக்கல் செய்யும்போது நான் சொத்தில் சுவாதீனத்தில் இல்லை என்றும் அதில் எனக்கு எவ்விதமாக உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

Sd/-

III Additional District Judge, Salem.